தினமணி

## விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி

First Published : 07 Jan 2010 06:40:10 AM IST

அரியலூர், ஜன. 6: விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி அளிக்கப்பட உள்ளது என்று அரியலூர் மாவட்ட ஆட்சியர் த. ஆபிரகாம் தெரிவித்தார்.

இதுகுறித்து ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி அளிக்க கீழ்க்கண்ட தலைப்புகளில் இருவாரப் பயிற்சி ஜனவரி 3-வது வாரம் முதல் அரியலூர் மாவட்டத்தில் 40 பேருக்கு நடைபெற இருக்கிறது.

பவர் டில்லர் இயக்குதல், பராமரித்தல், மேலாண்மை பயிற்சி, பம்ப் செட்டு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் பற்றிய பயிற்சி ஆகிய பயிற்சிகளில் சேர, 18 வயது முதல் 40 வயது வரையிலான விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பயிற்சியில் சேரும் விவசாயிகளுக்கு அரசு விதிகளின் படி, பயிற்சி முடிவின் போது உதவித் தொகை, சான்றிதழ் வழங்கப்படும்.

அரியலூர் பகுதிகளிலுள்ள விவசாயிகள் அரியலூர் அண்ணாநகரில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தையும், ஜயங்கொண்டம் பகுதிகளிலுள்ள விவசாயிகள் ஜயங்கொண்டம்-சிதம்பரம் சாலையில் உள்ள வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தையும் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

## மானிய விலையில் பவர் மினி டிரில்லர்

First Published : 07 Jan 2010 09:52:05 AM IST

கமுதி, ஜன. 6: கமுதியில் விவசாயிக்கு மானிய விலையில் மினி பவர் டிரில்லர் வழங்கப்பட்டது.

கமுதி உதவிக் கோட்ட வேளாண் துறை ஏற்பாட்டில், தமிழக அரசு வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அலுவலக வளாகத்தில் தோப்படைபட்டியைச் சேர்ந்த விவசாயி முத்தையாவுக்கு ரூ.1.3 லட்சம் மதிப்புள்ள மினி பவர் டிரில்லர் ரூ. 45,000 மானியத்துடன் உதவிக் கோட்ட வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) சுப்பையா வழங்கினார். துணை மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மழையில் பாதித்த நெல் பயிர்களை ஆய்வு செய்வது எப்போது?

First Published : 07 Jan 2010 06:15:16 AM IST

வேதாரண்யம், ஜன. 6: நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் அண்மையில் பெய்த கனமழையால், மானாவாரி நிலப் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த சம்பா நெல் பயிர்கள் பாதிப்படைந்தது. எனவே, இதுதொடர்பாக சேதநிலை குறித்த ஆய்வு தாமதமாவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

வேதாரண்யம் பகுதியில் கடந்த மாதத்தில் பெய்த கனமழையால், நீர் நிலைகள் அனைத்தும் நிரம்பி வழிந்தது. பாலங்களை மூழ்கடித்த வெள்ளப் பெருக்கு, முக்கியச் சாலைகளில் வழிந்தோடியது. தாழ்வான நிலப் பரப்புகளில் வெள்ளம் தேங்கியது.

நீர் நிலைகளைச் சார்ந்த ஆதனூர், அண்டர்காடு, கருப்பம்புலம், பன்னாள், கடிநெல்வயல், மருதூர், தகட்டூர், தென்னடார், பஞ்சநதிக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட சம்பா நெல் பயிர்கள் பாதிப்படைந்தது.

தற்போது தண்ணீர் வடிந்துவிட்ட நிலையில், சில இடங்களில் ஏற்பட்டுள்ள முழுமையான பாதிப்புகளால் விவசாயிகள் கடன் சுமையால் அவதியுறுகின்றனர்.

அத்துடன், பொருளாதார சேதநிலையைத் தாண்டிய பூச்சித் தாக்குதல் கூடுதல் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளம் தோங்கியிருந்தபோது வேளாண்துறையினர் ஆய்வு செய்தனர். வடிந்த பின்னர், சேதநிலையை கணக்கிடுவதில் சுணக்கநிலை காணப்படுகிறது.

பெயரளவில் கூட, வேளாண்துறையினர் பாதிப்பை பார்வையிட்டு ஆய்வு செய்யவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களைப்போல, மாவட்ட நிர்வாகம், வேளாண்துறையினர் ஆய்வு செய்ய இது தகுந்த தருணம். பயிர் பாதிப்பைக் கணக்கிட்டு நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளவதுடன், பயிர் பாதுகாப்புத் திட்டத்தில் இழப்பீடு கிடைக்கவும் வழிவகை செய்யப்படுமா என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

### இலவச கால்நடை மருத்துவ முகாம்

First Published : 07 Jan 2010 12:00:00 AM IST

விருத்தாசலம், ஜன. 6: விருத்தாசலம் அருகில் உள்ள க.இளமங்கலம் கிராமத்தில் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் ஆடு, மாடு மற்றும் கோழிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பசுமாடுகளுக்கு குடற்புழு நீக்கம், மலட்டுத்தன்மை நீக்கம், செயற்கை கருவூட்டல், சினை ஆய்வு ஆகியன செய்யப்பட்டன. மேலும் மாடுகளுக்கு சப்பை நோய் தடுப்பூசி போடப்பட்டது.

கால்நடை ஆய்வாளர்கள் வீரப்பன், பொன்வேலன், திலிபன், மருத்துவர் சரவணன், பராமரிப்பு உதவியாளர் செல்வராஜ் ஆகியோர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிததனர்.

ஊராட்சித் தலைவர் பழனியம்மாள் முகாமை தொடங்கி வைத்தார். சுப்ரீம் அரிமா சங்க தலைவர் முத்துக்குமார் தலைமை வகித்தார். கோட்ட கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் லட்சுமணன் முன்னிலை வகித்தார்.

### நெல்லில் ஆனைக்கொம்பன் ஈ தாக்குதல்

First Published : 07 Jan 2010 06:39:29 AM IST

பெரம்பலூர், ஜன. 6: பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிர்களில் ஆனைக்கொம்பன் ஈ தாக்கியுள்ளதாக பெரம்பலூர் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் சி. சங்கர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் தற்போது, 38,843 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிர்களில் ஆனைக்கொம்பன்
ஈ தாக்குதல் அதிகமாகக் காணப்படுகிறது. இந்தப் பூச்சித் தாக்குதல் தற்போது பெரம்பலூர் மாவட்டத்தில் முதல் முதலாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம், தட்பவெட்ப சூழ்நிலை, களைச்செடிகள், அளவுக்கு அதிகமாக யூரியா இடுவதால் இந்த நோய்கள் வருகின்றன. இந்தப் பூச்சியானது பொன்னி, பி.பி.டி., ஏ.டி.டி 45, 43 உள்ளிட்ட ரகங்களில் காணப்படுகிறது.

ஈ வகையைச் சேர்ந்த இந்தப் பூச்சி மஞ்சள் கலந்த ஆரஞ்சு நிறமாகவும், கொசுவைப் போன்று சிறியதாகவும், நீண்ட கால்களுடனும் இருக்கும். இந்தப் பூச்சியானது 150 முட்டைகளை இலைகளில் இடும். தாள்களின் மேல் புறமும், தேங்கிய தண்ணீரிலும் இடும். இதன் வாழ்க்கை சுழற்சி 20 முதல் 25 நாள்கள் ஆகும்.

இந்த ஈ இருந்தால், தூர்களுக்குப் பதிலாகக் கொம்பு போன்ற கிளைப்புகள் தோன்றும். கிளைப்புகள் வெண்மையாகவோ அல்லது இளம் சிவப்பு நிறமாகவோ குழல் போன்று வெங்காய இலையைப்போலத் தோன்றும். யானைத் தந்தத்தைப் போன்று குழலாகக் காணப்படுவதால் ஆனைக்கொம்பன் என்ற பெயர் பெற்றுள்ளது.

குழல் போன்ற தூர்களில் மேற்கொண்டு வளர்ச்சி இருக்காது. கதிர்கள் உண்டாகாது குழலின் நுனிப்பாகத்தில் ஈ வெளியேறிய பிறகு உள்ள கூட்டுப் புழுவின் தோல் பாதி வெளியே நீட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். இதனால், ஒரு சதுர கிலோ மீட்டருக்கு சேதம் ஏற்படும்.

இதைத் தடுக்க பிளேட்டை கேஸ்டர் ஒரைசே எனும் புழு ஒட்டுண்ணி இயற்கையிலேயே இந்தப் பூச்சியைக் கட்டுப்படுத்துகிறது. இந்த ஒட்டுண்ணிகள் கொண்ட தூர்களைச் சேகரித்து பத்து சதுர மீட்டருக்கு ஒன்று என்ற அளவில் வயலில் பரப்பலாம். இது தற்போது எளிதாக வயலில் உள்ளது. மேலும், பொரேட் என்ற குருணை மருந்தை ஓர் ஏக்கருக்கு 4 கிலோ அல்லது பிப்ரோனில் 10 கிலோ (தூவும்) தூளை வயலில் இடவும்.

பாதிக்கப்பட்ட செடிகளை உடனே அடிவேரோடு நறுக்கி அழிக்க வேண்டும். நெல் பயிர்களின் அடியில் வேப்பம் புண்ணாக்கு அதிகமாக இடவும். இவ்வாறு செய்தால் அதிக மகசூல் பெறலாம் என்றார் அவர்.

### தென்னையில் ஊடுபயிர்: கூடுதல் லாபம் தரும் கோகோ

First Published : 07 Jan 2010 01:40:36 AM IST

விழுப்புரம், ஜன. 6: விவசாயிகள் தென்னையில் ஊடுபயிராக கோகோ பயிரிட்டு ஆண்டுக்கு ரூ.20 ஆயிரம் வரை கூடுதல் லாபம் பெறலாம். இப் பயிர்களுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறை மூலம் 75 சதவீதம் அளவுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

÷கோகோ தென்அமெரிக்காவில் உள்ள அமேசான் ஆற்றுவடி நிலப் பகுதியில் முதலில் விளைய ஆரம்பித்தது. கானா, பிரேசில், நைஜீரியா, மெக்சிகோ, இந்தோனேசியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் கோகோ பயிரிடப்படுகிறது. இந்தியாவில் 1970-ம் ஆண்டு கோகோ பயிரிட தொடங்கப்பட்டது.

÷தென்னை மற்றும் பாக்கு தோப்புகளில் கோகோ சிறந்த ஊடுபயிராக விளையும். தமிழகத்தில் தற்போது 2,500 ஹெக்டேர் அளவுக்கு கோகோ பயிரிடப்படுகிறது. கோகோ சாக்லேட், கேக், ஐஸ்கிரீம் மற்றும் ஊட்டப் பாணங்கள் தயாரிக்க தேவைப்படும் முக்கியப் பொருள். இதனால் இதன் தேவை அதிக அளவில் உள்ளது. விழுப்புரம் மற்றும்

அதை சுற்றியுள்ள மாவட்டங்களில் தென்னை பல்வேறு இடங்களில் உள்ளன. இவற்றில் ஊடுபயிராக கோகோ பயிரிடலாம். கோகோ பயிரிட்ட 3-ம் ஆண்டு முதல் பயன்தரத் தொடங்கும். 45 ஆண்டுகள் வரை தொடர்ந்து பயனளிக்கும். கோகோ இலைகள் மண்ணில் விழுவதன் மூலம் மண்ணிலும் அங்ககச் சத்து கூடுகிறது. மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கிறது. மண் அரிப்பை தடுக்கிறது. கோகோ பழத்தின் ஓடுகள் உரங்களாக பயன்படுகின்றன. இதனால் விவசாயிகளுக்கு தென்னை மகசூலும் அதிகரிக்கும். கோகோவும் விளைந்து லாபம் தரும். கோகோவை ஜூன், ஜூலை, செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் பயிர் செய்யலாம்.

**பயிரிடும் முறை**

45 செ.மீ. நீளம் மற்றும் அகலம் மற்றும் ஆழத்துக்கு குழி வெட்டி இரண்டு தென்னை வரிசைக்கு நடுவில் நட வேண்டும். 10 அடி இடைவெளி இருக்க வேண்டும். பாரஸ்டிடிரோ வீரிய வகை நாற்றுகளை பயன்படுத்துதல் நலம். நடும் கன்றுகள் 60 செ.மீ. உயரம் இருக்க வேண்டும். நடவு செய்தவுடன் தண்ணீர்விட வேண்டும். நாள் ஒன்றுக்கு 20 லிட்டர் கிடைக்குமாறு பாசனம் செய்ய வேண்டும். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 20 லிட்டர் முதல் 30 லிட்டர் வரை கிடைக்குமாறு பாசனம் செய்யலாம்.

÷கோகோவுக்கு வழங்கப்படும் மானியம் குறித்து விழுப்புரம் தோட்டக் கலைத் துணை இயக்குநர் பி.தண்டபாணி, உதவி இயக்குநர் பி.ராஜாமணி ஆகியோரிடம் கேட்டபோது அவர்கள் கூறியது:

÷ஒரு ஹெக்டேருக்கு 500 கன்றுகள் வரை கோகோ கன்றுகள் வழங்குகிறோம். முதலாம் ஆண்டு ரூ.5,625 வரை கன்றுகள் மற்றும் இடுபொருள்களாக மானியமும், 2-ம் ஆண்டு ரூ.2,250 அளவுக்கு 50 கன்றுகள் (பழுதான கன்றுகளுக்கு பதில் நடுவதற்கு) உரங்கள் உள்ளிட்ட இடுபொருள்களாகவும் மானியம் வழங்குகிறோம்.

÷வானூர், மரக்காணம் பகுதிகளில் அதிக அளவு தென்னை வளர்கிறது. இவற்றில் விவசாயிகள் கோகோவை பயிட்டு கூடுதல் லாபம் பெறலாம் என்றனர்.

÷விவசாயிகளுக்கு கோகோ பயிரிட ஹெக்டேருக்கு ரூ.10 ஆயிரம் முதல் ரூ.12 ஆயிரம் வரை செலவாகலாம். மூன்று ஆண்டுக்கு மேல் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரமும் சாகுபடியை பொறுத்து அதற்கு அதிகமாகவும் லாபம் கிடைக்கும். இது தொடர்பாக மேலும் விவரம் மற்றும் மானிய உதவிகள் வேண்டுவோர் 04146-221163, 222335 என்ற விழுப்புரம் தோட்டக் கலைத் துறையின் தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## வெங்காய ஏற்றுமதி சரிவு

First Published : 05 Jan 2010 11:20:00 PM IST

புது தில்லி, ஜன.4: நாட்டின் வெங்காய ஏற்றுமதி கடந்த டிசம்பர் மாதத்தில் 21 சதவீதம் குறைந்துள்ளது. ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயத்தின் விலையை அரசு கூடுதலாக நிர்ணயித்ததால் ஏற்றுமதி குறைந்துள்ளது.

உள்நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அரசு ஏற்றுமதி வெங்காய விலையை உயர்த்தியது. டிசம்பர் மாதத்தில் 78,924 டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 2008-ம் ஆண்டு டிசம்பரில் 1,00,379 டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இத்தகவலை தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அறக்கட்டளை (என்ஹெச்ஆர்டிஎப்) தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக உள்நாட்டில் வெங்காய தட்டுப்பாடு ஏற்படக்கூடாது என்பதற்காக ஏற்றுமதிக்கான விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

டிசம்பர் மாதத்தில் ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயத்தின் குறைந்தபட்ச விலை டன்னுக்கு 450 டாலராக நிர்ணயிக்கப்பட்டது. முந்தைய ஆண்டு (2008) இதேகாலத்தில் இது டன்னுக்கு 330 டாலராக இருந்தது. வெங்காய ஏற்றுமதியை வேளாண் கூட்டுறவு அமைப்பான நாஃபெட் ஒருங்கிணைக்கிறது. இந்நிறுவனத்துடன் 13 அமைப்புகள் இணைந்து குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை நிர்ணயிக்கின்றன. தற்போது உள்நாட்டில் வெங்காயம் கிலோ ரூ. 20-க்கு விற்கப்படுகிறது.

### மழைநீரை தேக்க மாற்று திட்டம்

First Published : 07 Jan 2010 12:45:33 AM IST

புதுச்சேரி, ஜன.6: புதுச்சேரியில் மழைநீரை தேக்குவதற்காக மாற்றுத் திட்டம் குறித்து ஆலோசித்து வருவதாக வேளாண் செயலர் டி.சி.சாஹூ தெரிவித்தார்.

புதுச்சேரி வேளாண்துறையின் நிலநீர் பிரிவின் சார்பில், தனியார் தொழிற்சாலை அலுவலர்களுக்கான மழை நீர் சேகரிப்பு, நீர்வளப் பாதுகாப்பு மற்றும் கழிவுநீர் மேலாண்மைப் பற்றிய கருத்தரங்கம் காமராசர் கல்வி வளாக கருத்தரங்க கூடத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கை தொடங்கி வைத்து வேளாண் செயலர் டி.சி.சாஹூ பேசியது:

நீரை வீணடிப்பது காலையில் பல் துலக்குவதற்கு, குழாயை திருப்புவதில் இருந்து தொடங்குகிறது. இதனை தவிர்த்து போதுமான நீரைப் பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு சிக்கனமாகப் பயன்படுத்தினால், நாம் பயன்படுத்தும் நீரின் அளவு குறையும்.

இதனால் நாம் நிலத்தடி நீரை உறிஞ்சுவது குறைந்து நிலத்தடி நீர்வளம் பாதுகாக்கப்படும். தொழிற்சாலையிலிருந்து கழிவு நீரை வெளியேற்றினால் சுற்றுச்சூழல் பாதிப்புக்குள்ளாகும்.

இக்கழிவு நீரை சுத்திகரித்து, கழிவறைகளிலாவது பயன்படுத்த முயற்சிக்கலாம் என்றார்.

÷வேளாண் இயக்குநர் சத்தியசீலன் பேசும்போது, "விவசாயம் செய்ய மிக முக்கிய தேவை நீர்வளம். நிகழ்ச்சி மற்றும் விருந்துகளில் குடிநீர் பாட்டில்களை வைப்பது தற்போது கெப்ரவமாகக் கருதப்படுகிறது.

மாநில பிரிவினை நடைபெறும்போது நீர் வளத்தை வைத்தே பிரிக்கப்படுகிறது. வள்ளுவனே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நீர் இன்றி அமையாது உலகு என்று கூறியிருக்கிறார்.இத்தகைய நீரை கிடைக்கும்போது சேமிக்க வேண்டும். சேமித்த நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்' என்றார்.

கல்வித்துறையின் மாவட்ட பயிற்சி மைய சிறப்பு பணி அலுவலர் கிருஷ்ணன் பேசும்போது, "கிடைக்கின்ற நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது, மழை நீரை சேமிப்பது, கழிவு நீர் மேலாண்மை குறித்து ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஏற்கெனவே விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. தற்போது தனியார் தொழிற்சாலை அலுவலர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சி வரவேற்கத்தக்கது' என்றார். மழைநீர் சேகரிப்பின் அவசியம், சேகரிப்பு முறைகள், நீர் பராமரிப்பு, நீர் வள பாதுகாப்பு, கழிவு நீர் மேலாண்மை குறித்த கருத்துகளை அதற்கான சிறப்பு வல்லுநர்களின் மூலமாக விளக்கப்பட்டன. தொழில் மற்றும் வர்த்தகத்துறை இயக்குநர் பன்னீர்செல்வம், நிலத்தடி நீர் ஆணையத்தின் உறுப்பினர் செயலர் சுப்பிரமணியன்,வேளாண் பொறியியல் பிரிவின் கூடுதல் இயக்குநர் சேகர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### நுண்ணூட்ட மேலாண்மை பயிற்சி முகாம்

First Published : 07 Jan 2010 09:37:17 AM IST

பழனி, ஜன. 6:  தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் மா மற்றும் கொய்யாவில் மதிப்பூட்டு சங்கிலித் திட்டம், கடந்த 6 மாதமாக நடைமுறைப்படுத்தப்பட்டு  வருகிறது. இதில், திண்டுக்கல் மாவட்டம் பழைய ஆயக்குடியைச் சேர்ந்த 25 விவசாய பயனாளிகளும், கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியைச் சேர்ந்த 75 விவசாய பயனாளிகளும் பங்கேற்று வருகின்றனர். இவர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக பழைய ஆயக்குடி கொய்யா பயனாளிகளுக்கு கொய்யாவில் நுண்ணூட்ட மேலாண்மைப் பயிற்சி வழங்கப்பட்டது. இதில், விவசாயிகள் சங்கத் தலைவர் சகாதேவன், செயலர் ஞானவேல், பொருளாளர் ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.      பயிற்சியை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக, பழத்துறைத் தலைவர் பாலமோகன் வழங்கினார்.

தினமலர்

இந்திய உணவு ருசி, ரொம்ப சூப்பரு : அமெரிக்க மாணவர்கள் புகழாரம்
ஜனவரி 07,2010,00:00  IST



கோவை : " இந்திய உணவு ருசியை அமெரிக்கர்கள் விரும்பி சுவைக்கின்றனர். சாம்பார் பொடி, ரசப்பொடி, மசாலா பொடி போன்ற இந்திய பாரம்பரிய உணவுப் பொருட்களுக்கு அமெரிக்காவில் அதிக மவுசு உள்ளது' என்று, கோவை வந்துள்ள அமெரிக்க கார்னல் பல்கலை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் தெரிவித்தனர்.

சர்வதேச வேளாண்மை மற்றும் கிராம ஊரக வளர்ச்சி கல்வித் திட்டத்தின் கீழ், அமெரிக்காவில் உள்ள "கார்னல் பல்கலை'யில் முதுகலை தொழிற்கல்வி படிக்கும் மாணவர்கள் கோவை வந்துள்ளனர். இக்கல்வி திட்டத்தின்படி, கோவை வேளாண் பல்கலை மற்றும் அமெரிக்காவில் உள்ள கார்னல் பல்கலை இடையே இரட்டைப் பட்டம் படிப்பு படிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. ஒப்பந்தத்தின்படி, கோவை வேளாண் பல்கலையில் படிக்கும் 13 மாணவர்கள் மற்றும் நான்கு பேராசிரியர்கள் அமெரிக்க பல்கலையிலும், அங்குள்ள மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கோவை வேளாண் பல்கலையிலும் பயிற்சி பெறுவர்.

அமெரிக்க பல்கலை மாணவர்கள், வரும் 16ம் தேதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றனர். வயல்வெளி ஆய்வு, ஊரக வளர்ச்சி, வேளாண் விற்பனை, விரிவாக்கம் பற்றி ஆய்வு நடத்தி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக ஆர்.எஸ்.புரத்தில் உள்ள உழவர் சந்தைக்கு நேற்று காலை இக்குழுவினர் வந்தனர். விவசாயிகளே நேரடியாக விளைபொருட்களை விற்பனை செய்யும் திட்டத்தைக் கண்டு பிரமித்தனர். அவர்களுக்கு இளநீர்,

பப்பாளி, வாழைப் பழங்கள், முந்திரி பழம் வழங்கப்பட்டன. "பிரெஷ்' ஆன காய் கறிகள், பச்சை மிளகாயை உற்சாகமாக கடித்து சுவைத்தனர். விவசாயிகளிடம் விலை விபரங்களை கேட்டறிந்தனர்.

அதன் பின் அமெரிக்க மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கூறியதாவது: அமெரிக்காவிலும் இதே போன்ற நேரடி காய்கறி சந்தைகள் உண்டு. ஆனால், இங்குள்ளதை விட பல மடங்கு விலை அதிகம். இங்கு ஒரு கிலோ தக்காளி 13 ரூபாய்க்கு கிடைக்கிறது; அங்கு 150 ரூபாய். அமெரிக்க காய்கறிகள், பழங்களில் உள்ள சிறந்த தரம் இங்கு இல்லை. ஆர்கானிக் காய்கறிகள், பழங்களுக்கு அமெரிக்காவில் சிறந்த வரவேற்பு உள்ளது. இந்தியாவில் இப்போது தான் அதன் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. இந்திய உணவு ருசியை அமெரிக்கர்கள் விரும்பி சுவைக்கின்றனர். இதனால், இந்தியாவில் தயாராகும் சாம்பார், ரசம், மசாலா பொடி போன்ற பாரம்பரிய உணவுப் பொருட்களுக்கு அங்கு அதிக மவுசு உள்ளது. மாம்பழம், முருங்கைக்காய் போன்ற விளைபொருட்களை அதிகளவில் ஏற்றுமதி செய்வதன் மூலம் அமெரிக்க உணவு சந்தையை இந்தியா கையகப்படுத்தி வருகிறது. ஆனால், போக்குவரத்து, பதப்படுத்தும் முறைகளில் உள்ள அதிக செலவால் குறைந்த பொருட்களே அங்கு கிடைக்கிறது. இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி கூறியதாவது: இந்திய விவசாய முறைகள் பற்றி இவர்கள் ஆய்வு செய்கின்றனர். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மூலம் கிராமப்புற வறுமையை ஒழிப்பது பற்றியும் ஆய்வு நடத்துகின்றனர். இதன் மூலம் வளர்ந்த, வளரும் நாடுகளில் உள்ள விவசாயிகளின் கலாச்சாரம், வாழ்க்கை முறை பற்றி அறியும் வாய்ப்பு கிடைக்கிறது. உலகளவில் உணவு மற்றும் வேளாண் துறை சந்தித்து வரும் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காணவும் இந்த இரட்டை பட்டப்படிப்பு பயன்படும். இது தொடர்பாக இரு நாட்டு மாணவர்களும் தங்கள் எண்ணங்களை பரிமாறிக் கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்திய வயல்வெளி பிரச்னைகள், உணவு உற்பத்தி திறன் அதிகரிப்பு, வேளாண் ஊக்குவிப்பு முறைகளையும் அறிந்துகொள்ள முடியும். இவ்வாறு, முருகேச பூபதி தெரிவித்தார்.

உழவர் சந்தை "விசிட்'டுக்கு பின், வேளாண் பல்கலையில் பயிர் இனப்பெருக்கம், உயிர் தொழில் நுட்பவியல், செயற்கை மகரந்த சேர்க்கை, சிறு தானிய உற்பத்தி முறைகள் பற்றி அமெரிக்க மாணவர்கள் கேட்டறிந்தனர். "வீடியோ கான்பரன்சிங்' முறையில் இந்தியாவில் உள்ள வேளாண் விற்பனை நிலைய அலுவலர்களுடன் உரையாடினர். கோவையில் இக்குழுவினர் தங்கியுள்ள மீதமுள்ள நாட்களில் தோட்டக்கலை, விளைபொருட்கள் விலை நிர்ணய முறை, இயற்கை எரிபொருள், கொய் மலர்கள், இயற்கை வேளாண்மை, சுயவேலை வாய்ப்பு குழு ஆகிய வேளாண் பல்கலையின் புதுமையான திட்டங்கள் பற்றி ஆய்வு நடத்தி, விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காணும் வழிமுறைகளை பரிந்துரைக்கவுள்ளனர். அமெரிக்க குழுவினரின் ஆய்வு பணிகளை வேளாண் பல்கலை முதுகலைப் பட்டப்படிப்பு "டீன்' உதயகுமார், வேளாண் இணை இயக்குனர் சங்கர்ராஜ் ஆகியோர் ஒருங்கிணைத்து வருகின்றனர்.

**வெளிமாநிலங்களில் ஒரு கிலோ வெல்லம் ரூ.70: விவசாயிகள் மகிழ்ச்சி**

ஜனவரி 07,2010,09:53



அலங்காநல்லூர்: மதுரையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்லம், அச்சுவெல்லம் தயாரிப்பில் கரும்பு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். விலை உயர்வு காரணமாக உற்பத்தி பன்மடங்கு அதிகரித்துள்ளது. வெளிமாநிலங்களில் கிலோ வெல்லம் 70 ரூபாய் வரை விற்கப்படுகிறது

மதுரையில் அலங்காநல்லூர், பாலமேடு, வாடிப்பட்டி, எழுமலை, உசிலம்பட்டி, சேடபட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் ஏழாயிரம் எக்டேர் நிலத்தில் கரும்பு கடந்த ஜூன் இறுதியில் பயிரிடப்பட்டது. பொங்கலை முன்னிட்டு தற்போது கரும்பு அறுவடை ஜரூராக நடக்கிறது. இப்பகுதிகளில் கரும்பு விவசாயிகள் தங்களது வயல்காட்டிலேயே சிறிய அளவில் வெல்லம் தயாரிக்கும் ஆலைகளை அமைத்து வெல்லம் மற்றும் அச்சுவெல்லம் தயாரிக்கின்றனர். கரும்பு சாறு பிழிய டீசல் இன்ஜினை பயன்படுத்துகின்றனர். கடந்த ஆண்டை விட, வெல்லம் விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். பத்து கிலோ கொண்ட ஒரு சிப்பம் 410 ரூபாய் முதல் 450 ரூபாய் வரை விலை போகிறது. கடந்தாண்டு இதன் விலை சிப்பம் ஒன்றுக்கு 150 வரை குறைவாக இருந்தது.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, "ஆகஸ்ட்டில் இருந்து கரும்பு வெட்டப் படுகிறது. தொடர்ந்து ஆறு மாதங்கள் வரை இங்கு கரும்பு வெட்டும் பணியில் ஈடுபடுகிறோம். பின், தாராபுரம் பகுதியில் ஆறு மாதங்கள் கரும்பு வெட்டும் பணியில் ஈடுபடுவோம். மதுரையில் ஆறு மாதம், தாராபுரத்தில் ஆறு மாதம் என ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கிறது. வெட்டுக்கூலி தற்போது உயர்ந்துள்ளது. தனி நபர் ஒருவருக்கு தினமும் 140 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை கூலியாக கிடைக்கும்," என்றார். மேலும், "நாற்பது ஆண்டாக கரும்பு வெட்டும் வேலையில் ஈடுபட்டு வருகிறேன். தற்போது வெல்ல ஆலையில் கரும்பு சக்கையை காயவைக்கும் வேலை செய்கிறேன். வெல்லம் விலை உயர்வால், சர்க்கரையை பயன்படுத்தி வந்தவர்கள் பலர் அச்சுவெல்லத்திற்கு மாறியுள்ளனர். சர்க் கரையை வெண்ணை நிறமாக்க உடலுக்கு கேடு விளைவிக்கும் பல ரசாயன பொருட் களை பயன்படுத்துகின்றனர். ஆனால், சர்க்கரையை விட அச்சுவெல்லம் தான் உடலுக்கு நல்லது," என்றார்.

ஒரு கிலோ வெல்லம் ரூ.70: வெல்லம் விலை உயர்வால் உற்பத்தியை மும் மடங்கு விவசாயிகள் அதிகரித்துள்ளனர். இவர்களில் பலர் முதல்தர மஞ்சள் நிற வெல்லம், சர்க்கரை சுவைக்கு ஈடான முதல்தர அச்சு வெல்லம் சிப்பங்களை மதுரை, தாராபுரத்தில் உள்ள வெல்ல மார்க்கெட்டிற்கு மொத்தமாக கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். அங்கிருந்து ஒரிசா, பஞ்சாப், ஆந்திரா, கர்நாடகா, கேரள மாநிலங்களுக்கு லாரிகள், ரயில்களில் கொண்டு சென்று கூடுதல் விலைக்கு விற்கின்றனர். இதன்படி, பஞ்சாப்பில் ஒரு கிலோ வெல்லம் 70 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.